FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை

U/s 173 BNSS ~~(Cr.P.C.)~~

(குற்ற.வி.தெ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213006

1. District : Chennai மாவட்டம் | PS: VGAC, CSU-I காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 3/AC/2025/CC-I மு.த.அ. எண் | Date: 30.06.2025 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 17.00hrs

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: U/s 7(b)

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 10.02.2025 | Date to : நாள் வரை 20.06.2025, 25.06.2025

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.06.2025 | Time : நேரம் 15.00hrs

seen. 01/07/2025.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.06.2025 | Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக by Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North - About 8 kms

Seen M.Rijwf 01.07.25

Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி O/o Manapakkam, TANGEDCO office, Manapakkam, Chennai

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Dinesh kumar | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ramachandra

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 40 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Manager MACTER-private company | (g) Address : முகவரி NO 3/115 Sathiya Nagar, 3rd St Manapakkam, Chennai - 600 089

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Annamalai, Commercial Inspector, TANGEDCO Manapakkam, Chennai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded bribe amount of Rs 15,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — NIL —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — NIL —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி தகவல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
30/06/2025

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01/07/2025
@ 10.30 hrs

Name: பெயர் N. SUMATHRA
Rank: நிலை Inspector of Police, No.எண்
VSAC, CSU-I
Chennai-16

(Contents of the F.I.R. in CSU-1, V & AC, Cr.No.3/AC/2025/CC-1, U/s. 7(b) of Prevention of Corruption (Amendment), Act –2018, continues.....)

பணிந்து அனுப்பப்பட்டது:- ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-1, காவல் ஆய்வாளர் N.சுமத்ரா ஆகிய நான் இன்று 30.06.2025-ம் தேதி 15.00 மணியளவில் பணயில் இருந்தபோது ரா.தினேஷ்குமார் வயது (40), த/பெ ராமச்சந்திரன், 3/115, சத்யா நகர் 3 வதுதெரு, மணப்பாக்கம், சென்னை-600089 என்பவர் அலுவலகம் வந்து என்னிடம் எழுத்து முலமாக புகார் மனு ஒன்றை கொடுத்தார் அவர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர், ரா.தினேஷ்குமார் வயது (40),த/பெ ராமச்சந்திரன், 3/115, சத்யா நகர் 3 வதுதெரு, மணப்பாக்கம், சென்னை-600089. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், நகர சிறப்பு பிரிவு 1, ,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, ஆலந்தூர், சென்னை-600016. அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் MACTER என்ற கம்பெனியில் மேலாளராக கடந்த ஐந்து வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். எனது அலுவலகம் அண்ணா நகரில் உள்ளது. எனக்கு 2015 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது மனைவியின் பெயர் s.சரண்யா அவர்கள் வேலைக்கு ஏதும் செல்லவில்லை, எனக்கு சித்தார்த், மித்ரன் என இரண்டு மகன்கள் உள்ளனர். அவர்கள் பள்ளியில் படிக்கிறார்கள். என்னுடைய தந்தை, தாய் பெயரில் இருந்த மணப்பாக்கம் சொத்தை எனது பெயரில் கிரையம் செய்தார்கள். நான் திருமணம் ஆனவுடன் எனது மனைவி பெயரில் கிரையம் செய்து அங்கு இருந்த பழைய வீட்டை இடித்து புதிதாக வீடு கட்டினோம். வீட்டிற்கு தேவையான மின் இணைப்பை விண்ணப்பித்தேன். என்னுடைய வீட்டில் எனது குடும்பத்தினர்களுக்காவும் மற்றும் வாடகை விடுவதற்காகவும் எனக்கு 6 மின் இணைப்புகள் தேவைப்பட்டது. அப்போது மணப்பாக்கம் மின்சார அலுவலகம் கமர்ஷியல் இன்ஸ்பெக்டராக பணிபுரியும் அண்ணாமலை அவர்களை சந்தித்தேன். அப்போது அவர் 6 மின் இணைப்பிற்கு 2500/- வீதம் 15,000/- ரூபாய் எனக்கு லஞ்சமாக கொடுங்கள் என்று கேட்டார். நான் அதற்கு ஏதும் கூறாமல் வந்து விட்டேன்.அதன்படி 11/02/2025 அன்று மி.இ. எண் 200093220225108 அதற்கான அரசிற்கு

30/6/2025

செலுத்தவேண்டிய ரூபாய் 19520/- செலுத்தியதால் அந்த இணைப்பை கொடுத்துவிட்டார். மேலும் அதே தேதியில் மி.இ. எண் 200093220225109 அதற்கான அரசிற்கு செலுத்தவேண்டிய ரூபாய் 19820/- செலுத்தியதால் அந்த இணைப்பை கொடுத்துவிட்டார். மற்றும் அதே தேதியில் மி.இ. எண்200093220225110 அதற்கான அரசிற்கு செலுத்தவேண்டிய ரூபாய் 19520/- செலுத்தியதால் அந்த இணைப்பை கொடுத்துவிட்டார். பிறகு 19/03/2025 அன்று மின் இணைப்பு. எண்200093220325177 நான்காவது இணைப்பையும் கொடுத்தார். அதற்கான அரசிற்கு செலுத்தவேண்டிய ரூபாய் 19520/- செலுத்தியதால் அந்த இணைப்பை கொடுத்துவிட்டார். 5 வது இணைப்பபை 27/03/2025 மின்.இ.எண் 200093220325176 அதற்கான அரசிற்கு செலுத்தவேண்டிய ரூபாய் 19520/- செலுத்தியதால் அந்த இணைப்பையும் கொடுத்துவிட்டார். ஆறாவது மின் இணைப்பை கொடுக்காமல் நான் போன் செய்தாலும் எடுக்காமல் மிகவும் இழுத்தடித்து மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கினார். ஆறாவது மின் இணைப்பு எண் 200093220525244 அதற்காக அதற்கான அரசிற்கு செலுத்தவேண்டிய ரூபாய் 17550/- ஐ 21/05/2025 அன்று செலுத்திவிட்டேன். அதற்கான மின் இணைப்பை நான் பணம் ஏதும் கொடுக்காத காரணத்தினால் திரு. அண்ணாமலை கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் மின் இணைப்பு வழங்காமல் காலம் தாழ்த்தி அலைக்கழித்தார். நானே கடந்த 20/06/2025 அன்று அவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் இன்று உங்கள் வீட்டிற்கு இணைப்பு கொடுத்துவிடுவார்கள் என்றும், நான் கேட்ட லஞ்சப்பணம் என்னாச்சு எனறும் கேட்டார். நான் பணம் ஏற்பாடு செய்துவிட்டு போன் செய்கிறேன் என்று கூறினேன். அன்றே மின் இணைப்பை மின் ஊழியர்கள் வந்து கொடுத்து விட்டனர். நான் பணம் ஏற்பாடு செய்து விட்டு 25/06/2025 அன்று அவருக்கு போன் செய்தேன். அவர் மறுபடியும் 6 மின் இணைப்பிற்கு 2500/ விதம் 15,000 ரூபாய் ஏற்பாடு செய்து விட்டீர்களா என்று கேட்டார். நானும் ஏற்பாடு செய்து விட்டேன் என்று கூறினேன். அதற்கு அவர் நான் வேலை நிமித்தமாக வெளியில் செல்கிறேன் என்று கூறினார். நானும் ஓரிரு நாளில் தருகிறேன் என்று கூறிவிட்டு போனை துண்டித்து விட்டேன். எனக்கு லஞ்சம்

30/6/2025

கொடுக்க விருப்பம் இல்லாததால் மணப்பாக்கம் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு. அண்ணாமலை மீது நடவடிக்கை எடுக்க லஞ்ச ஒழிப்பு துறைக்கு இன்று 30/06/2025 இன்று மதியம் 3 மணிக்கு தங்கள் அலுவலகம் வந்து புகார் அளிக்கிறேன். அவர் லஞ்சமாக கேட்ட ரு 15,000 ம் கொண்டு வந்துள்ளேன். மேற்படி மணப்பாக்கம் கமர்ஷியல் இன்ஸ்பெக்டர் திரு.அண்ணாமலை மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு R.Dineshkumar, (sd.xxx) 30/06/2025.

Sir,

The above complaint was received today 30.06.2025 at 15.00 hrs and after getting concurrence conducted discrete verification and upon permission, registered a case in V&AC, CSU-1 Cr.No.3/AC/2025/CC-1, U/s 7 (b) of Prevention of Corruption (Amendment) Act 2018 on 30.06.2025 at 17.00 hrs taken up for investigation. I herewith submit the original F.I.R and the complaint to the Hon'ble Principal Judge, City Civil and Sessions Court, Chennai. I also forward the copy of F.I.R to the officer's concerned.

30/06/2025

INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption
City Special Unit-I MKN Road,
Alandur, Chennai - 600 016.
(Near St. Thomas Mount Metro Railway Station)